விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மார்கழி 19 ஜ. ஆங்கிர் பிறை 16 இதழ்: 253
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-1-1991

## சமாதான முயற்சிக்கு ஆஸ்திரேலியா முன்வருகிறது

(கன்பரா)

விடுதலைப்புலிகளுக்கும்- இலங்கை அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்து யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது

இது தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு சம்பந்தப்பட்ட இரு தரப்புடனும் உடனடியாகத் தொடர்புகொண்டுள்ளது. மேலும் ஆஸ்திரேலிய முக்கிய அதிகாரிகள் கொழும்பு வரவுள்ளனர்.

இவர்கள் இன்று வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது: தற்போதைய யுத்த நிறுத்தத்தை இரு தரப்புடம் கடைப்பிடித்து இதற்கு உதவ வேண்டுமென்றும் ஆஸ்திரேலியா கோரியுள்ளது. (சி)

## காரைநகர் கடற்படை பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வேரப்பிட்டி கடல் பகுதியில் மீனவரை கடற்படைக் கப்பல் நேற்று துரத்திச் சென்றுள்ளது. இதையடுத்து மீனவர் கரைக்குத் தப்பிவந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ யுத்த நிறுத்தம் பற்றி

# அனைத்துகட்சி தலைவர்களினது கருத்தின்பின்பே பிரேமா முடிவு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த அழைப்பிற்கு ஜனாதிபதி இன்று அனைத்துகட்சி தலைவர்களினதும கருத்துக்களை கேட்டபின், தமது முடிவை அறிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.**

இது தொடர்பாக அங்கீக இன்று முக்கியமான கூட்டம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அரசியல் கட்சித் தலைவர்களினதும் அபிப்பிராயங்களைப் பொறுத்தே அரசாங்கம் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (க)

சிக்கப்பட்ட அரசியல் கட்சிக ளின் தலைவர்களின் அபிப்பிராயங்களை அறியும்பொருட்டு

## அரசின் குற்றச்சாட்டுக்கு புலிகள் மறுப்பு

(கொழும்பு)

வடபகுதியில விடுதலைப் புலிகள் தாம் அறிவித்த யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளதாக அரசுத் தரப்பு குற்றம்சாட்டியுள்ளதை விடுதலைப்புலிகள் முற்றாக மறுத்துள்ளனர்.

ஆனையிறவு, காங்கேசன்துறை முகாம்கள் மீது புலிகள் நேற்று ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இரா

(4-ம் பக்கம் பார்க்க)

## கால அவகாசம் இன்று முடிவடைகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்தநிறுத்தத்தை ஆராய அரசு கேட்ட 3 நாள் கால அவகாசம் இன்றுடன் முடிவடைகிறது.

ஜனாதிபதி திரு பிரேமதாசா நேற்று கண்டி தலதா மாளிகையில் அரசு தரப்பு முடிவை அறிவிப்பாரென பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதி

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம் சாத்தியமா?

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்திற்கு அரசு தரப்பிலிருந்து சாதகமான பதில் கிடைக்குமா என்பது தற்போது கேள்விக் குறியாகி வருகிறது.

சர்வவல்லமையும் படைத்த ஜனாதிபதியாக இருக்கும் போதும் இதற்கான முடிவை சகல தரப்பிலுமிருந்து பெற்று வெளியிட காத்திருப்பதன் மூலம் திரு. பிரேமதாஸா இப்பிரச்சினையிலிருந்து நழுவ

(4ம் பக்கம் பார்க்க)

## ஒரு லட்சம் பேர் வெளியேறுகின்றனர்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வருடாந்தம் சுமார் ஒரு லட்சம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்கிறார்கள் என இலங்கை வெளிவிவகார அமைச்சகம் நேற்றுத்தெரிவித்துள்ளது.

கடந்தாண்டுமட்டும் 50,000 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ளார்கள் என அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## தமிழ் அமைப்புகள் இப்படி கூறுகின்றன

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து இலங்கையின் ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொள்வதாக கூறிய பின்பே அரசு யுத்த நிறுத்தத்திற்கு இணங்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பிலுள்ள தமிழ் அமைப்புகள் அரசுக்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## நயினாதீவு கடற்படை வழமைபோல் சோதனை

(வேலணை)

நயினாதீவு கடற்படையினர் தமது சோதனை நடவடிக்கைகளில் வழமைபோல் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளபோதிலும், கடற்படைச் சோதனை வழமைபோல் உள்ளது.

வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் நயினாதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லையாம்.

## மன்னிப்பு சபை புலிகளுக்கு பாராட்டு

(லண்டன்)

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்திற்கு முன்வந்ததை 'சர்வதேச மன்னிப்புச் சபை' பாராட்டியுள்ளது.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளால் சொல்லொணாத் துயரடைந்த தமிழ்மக்களுக்கு இது பெரும் ஆறுதலைத் தரும் மன்றும் தொடர்ந்து பிரச்சனைக்கு பேச்சுக்கள் மூலம் இரு தரப்பும் தீர்வுகாண வேண்டுமென்றும் சபை கேட்டுள்ளது.

இப்பகுதிகளில் இதுவரை காணாமல்போன தமிழர்களின் முழு எண்ணிக்கையையும் முழு விபரங்களுடன் மன்னிப்புச் சபை திரட்டிவருவதும் தெரிந்ததே. (சி)

## தளபதி உத்தரவு மீறப்பட்டது கிழக்கில் ராணுவம் தாக்குதல்

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் கூறியுள்ளபோதிலும் கிழக்கில் தமிழர்கள் மீது தாக்குதல்கள் தொடர்வதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டம் 35-ம் கட்டையடியில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயி ஒருவர் நேற்று முன் தினம் இராணுவத்தினரால் கத்தியால் குத்தி கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பகுதியில் அரச படையினர் நேற்று முன் தினம் 35 தமிழர்

(4-ம் பக்கம் பார்க்க)

## போராளிகளை கண்காணித்த இந்தியபீரங்கிபடகு மூழ்கியது

(மணிலா)

இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் நடமாட்டத்தை இந்தியக் கடற் பிராந்தியத்தில் கண்காணித்துவந்த இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான நவீன ரக பீரங்கிப் படகு ஒன்று. நேற்று 'சாட்ஜல சத்தி' என்னும் பகுதியில் கடலில் மூழ்கிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படகு மூழ்கிய சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும்

(4ம் பக்கம் பார்க்க)

## "காமன்வெல்த் முன்வரவேண்டும்"

(கன்பரா)

இலங்கையில் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு அரசும் முன்வந்தால், இதனைக் கண்காணிக்க 'காமன்வெல்த்' முன்வரவேண்டுமென விடுதலைப் புலிகள் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்ததாக 'ரேடியோ ஆஸ்திரேலியா' தெரிவித்துள்ளது. [சி]

## ...ரி விளம்பரம்

### இலவசம்

சாயி போதனைகள் விலை ரூபா 10/- ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் ரூபா 100/-க்கு மேல் வாங்குபவர்களுக்கு ரூபா 20/- க்கு பெறுமதியான புத்தகங்கள் இலவசம். பாலாஜி புத்தகசாலை 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-4225)

### FUDO-TYPEWRITERS

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO 39/17, மின்சார நிலையவீதி 3-ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணக்கிளை, பிரதான வீதி, மானிப்பாய். சி-4196


## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோப்பாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் என்பவரின் வீட்டில் புதிய சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

வீட்டிலுள்ளோர் திருவெம்பா பஜனைக்கு சென்ற போது இத்திருட்டு நடந்ததாக கூறப்படுகிறது.


## புதிய வகுப்புகள்

புதிய கல்வி நிலைய 1991ம் கல்வியாண்டிற்கான புதிய வகுப்புகள் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் 05 01-91 சனி பி. ப 3. 00 மணிக்கு 219, நாவலர் வீதி, (யுப்பிற்றர் வீடியோ சென்ரர் முன்பாக) யாழ்ப்பாணம் ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்கட்கு நேரில் வரவும். [சி-4232]


## நகரசபை பொன்விழா

(கொழும்பு)

திருகோணமலை நகரசபையின் ஐம்பதாவது ஆண்டு பொன்விழா திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. (எஸ்)

## இரண்டுநாள் சம்பளம் வழங்கமுடிவு

[மானிப்பாய்]

வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர்கள் தென்தமிழீழ மக்களுக்கு உதவும் பொருட்டு தமது இரண்டு நாள் சம்பளத்தை வழங்குவதற்கு முடிவுசெய்துள்ளனர்.

ஃ ஃ ஃ

(மானிப்பாய்)

மரணத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் தென் தமிழீழ மக்களுக்கு உதவும் பொருட்டு ஆனைக்கோட்டை முள்ளி தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினர் தமது ஒருநாள் சம்பளத்தை வழங்குவதென்று முடிவுசெய்துள்ளனர். (71)

## ஏழாலை அரசாங்க மருந்தகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மத்தியில் இதுவரை காலமும் இயங்கிவந்த ஏழாலை அரசினர் மத்திய மருந்தகம் இராணுவ தாக்குதல் காரணமாக ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்றக் கட்டடத்தில் இயங்கிவருகின்றது.

கர்ப்பிணிகளுக்கான சிகிச்சைகள் மேற்படி மருந்தகத்தில் நடைபெற்று வருவதாகவும் மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சைகளும் நடைபெற்று வருவதாகவும் வைத்திய அதிகாரி டாக்டர் கஏரம்பு தெரிவித்துள்ளார். [க]

## சங்கீதசபை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீத சபையின் மிருதங்கம், சங்கீதம், பண்ணிசை, நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கான பரீட்சைகள் அடுத்த ஏப்ரல் மாதம் 17-ந் திகதி ஆரம்பமாகும்.

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் பெப்ரவரி 11ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. [153]

## யாருடையது?

[யாழ்ப்பாணம்)

பூநகரி சங்குப்பிட்டி வீதியில் பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தமது பொருள்களை அடையாளம் காட்டி பூநகரி பள்ளமடு பிரதேச செயலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பிரயாண பை மீட்கப்பட்டது

[நல்லூர்)

கொழும்பில் இருந்து வந்த ஒருவரிடம் களவு போன பிரயாணப் பை ஒன்று வியாபாரிகளால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் நல்லூர் முத்திரைச் சந்தையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரயாணப் பை இழந்தவரை வீட்டில் இருந்து அழைத்து வந்து பையை கொடுத்த சம்பவத்தை பொது மக்கள் பலர் பாராட்டினார்கள்.


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

(யாழ். பிரிவு)

## சுதேசிய பொருள் விற்பனை நிலையம்

தைப்பொங்கல் தினம் (14-01-1991) ஆரம்பிக்கப் படவிருக்கும் எமது சுதேசிய பொருள் விற்பனை நிலையத்தில் தமது தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவோ விற்பனை செய்யவோ, விரும்பும் அரச/அரசசார்பற்ற நிறுவனங்கள், தனிநபர்கள் எமது செயலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்பிரிவு.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-964]

## கணிதப் பிரிவு மாணவர்கட்கு
## A/L 90, 91, 92

திரு. நல்லையா
திரு. கிருஸ்ணு

ஆகிய தரமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை

ஒவ்வொரு பிரிவிற்கும் மாதத்திற்கு 35 மணித்தியாலத்திற்குக் குறையாத வகுப்புக்கள்)

மேலதிக விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE
B.M.C. LANE, - JAFFNA.
(ஏ 956)

## ★ தாவரவியல் ★

திரு. செல்வநேசன்
(மிக விரிவான, விளக்கமான கற்பித்தலுக்கு)

A|L-92 ★ குழியவியல் ★ உருவவியல்

A|L-91 ★ தாவரஇராட்சியப் பிரிவு ★ உடற்றொழிலியல்

A|L-90 ★ சூழலியல் ★ இழையவியல்
வினாவிடை

விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE
B. M. C. LANE, JAFFNA.
(ஏ 955)

## SCIENCE ACADEMY
## NALLUR
## ஆண்டுகள் 9, 10, 11

விஞ்ஞானம் - இரா. செல்வவடிவேல்
கணிதம் - திரு. வாமதேவன்
ஆங்கிலம் - திரு. தேவா
தமிழ் - திரு கதிர்காமத்தம்பி
வர்த்தகம் - திரு. ஜீவா
சமூகக்கல்வி - திரு. திருக்குமார்

★ ஏனைய பாடங்களும் நடைபெறும் ★

ஆரம்பம் 05 - 01 - 1991

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் ரேட் கோண்டாவில்

A/L 90, 91, 92

கலை, வர்த்தக விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கணக்கியல் : திரு. மரியதாஸ
வர்த்தகம் : திரு. தேவா
பொருளியல் : திரு. உதயன்
இந்து நாகரீகம் : திருமதி அருள்நங்கை
புவியியல் : திரு. வேலா
அளவையியல் : திரு. S,S, மனோகரன்
தமிழ் : திரு. குழந்தை
அரசியல் : திரு. நவம்

பௌதிகம் : திரு. கணேசன்
இரசாயனம் : திரு. செல்வா
தூயபிரயோககணிதம்: திரு. கமலசிங்கம்
தாவரவியல் : திரு. பாலா
விலங்கியல் : திரு. தங்கராசா

(ஏ 963)


## அந்தியேட்டி கிரியையும் நினைவஞ்சலியும்

| 62-ம் நாள் | 31-ம் நாள் |
|---|---|
| திருமதி | செல்வன் |
| ந. நாகரத்தினம் | ந. சந்திரமோகன் |
| மலர்வு: 1922-06-06 | மலர்வு: 1962-04-12 |
| உதிர்வு: 1990-11-04 | உதிர்வு: 1990-12-04 |

பண்புடன் எம்மை வளர்த்த தெய்வமே
பாசமுடன் உங்கள் மடியில் தவழ்ந்தோம்:
விவேகமுடன் வளர்த்த பஞ்ச பாண்டவரில்
நேசமுடன் ஒரு மகனை உம் அருகிலே
பாதி வயதிலே அழைத்ததுதான் ஏனோ பெரியம்மா!

பாத்தியைக்கட்டி நாம் பண்புடன்
வளர்த்த செடி
பூத்து நல் மணத்தை சிந்தி
வாழ்ந்திடும் சிறப்பைக் காண
கனிந்திடும் வேளைதனில் காற்றென
எம்மை விட்டு கரைந்ததேன் சந்திரா!

பாசப் பிறப்பிடமே பண்பின் உறைவிடமே
பாண்டவரில் சகாதேவனே-உன்
சந்திரமுகத்தை காணாது
பரிதவித்து நிற்கின்றோம்-உன்
வழிகாட்டி இன்றி நாம் வாழத் தவிக்கின்றோம்
எம்மை எல்லாம் தவிக்கவிட்டு எங்கு
சென்றுவிட்டாய் எம் செல்வா!

விண்ணுலகில் உன் பெரியம்மாவுடன் நின்று
எம் வாழ்வுக்கு ஒளி தருவாய் சந்திரா!
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இறுதிச்சடங்கில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

பெற்றோர், சகோதரர்கள், சகோதரி,
மைத்துனிமார், பிள்ளைகள்

கலைநகர், சித்தன்கேணி. (சி 4234)

## முக்கிய திருப்பம்

பொன்னிற பொழுது புலர்ந்து, புத்தாண்டு மலர்ந்த தினத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. ஸ்ரீலங்கா அரசும் நல்ல முடிவை எடுத்தால் சமாதான சகவாழ்வுக்கு 'பூபாளம்' இசைத்தது போல இனிக்கும்.

இரு கைத்தாளங்கள் இணைந்தால் இனிய நாதம் தானாகவே கிளம்பும்.

முரண்பாடுகள், முறுகல் நிலைக்கு உட்பட்டு மோதியவர்கள் தாமாகவே முன்வந்து பேச மனம் வைத்தால் தீராத பிரச்சனைகள் தீரும் சூழ்நிலை தானாகவே உருவாகும்.

இதயங்களைப் பிழிந்து நாடி நரம்புகளை உறைய வைத்த யுத்த கெடுபிடி நீங்கவுள்ளமை? அனைவரையும் நிம்மதிப் பெருமூச்சு விட தூண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் எல்லையில்லா தாக்குதல்களின் மத்தியில் எந்த வேளையிலும் உயிரை இழக்கும் மனவேதனையை உள்ளடக்கி, போராடிக் கொண்டிருந்த, இராணுவத்தினரும் "யுத்த நிறுத்தம்" என்றதும் நள்ளிரவிலேயே ஷெல், கிரனேட் குண்டுகளும், 'பரா' வெளிச்சமும் கொளுத்தி வானத்தில் ஒளிவெள்ளம் பரப்பி தமது உள்ளத்து மகிழ்ச்சியைப் புலப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய மகிழ்ச்சி வெள்ளம் எங்கும் கரைபுரண்டு ஓடிய பொழுதும், தமிழ் மக்களின் பிரச்சனைக்கு "நிரந்தர தீர்வு காண்பது" ஒன்றே அதி முக்கியத்துவம் உடையது!

பல்வேறுநிலைகளிலும், பலம்பொருந்தி யுத்த நிறுத்தத்துக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் ஒன்றுபட்ட தமிழ் மக்கள மத்தியில் பூரண ஆதரவு என்ற பலத்தை மட்டுமல்ல, ஆயுத பலத்தின் மூலம் எமது சொந்த மண்ணில் தமது வலுவான கால்களை ஆழப்பதித்து ஊன்றிய உரமான நிலையிலேயே சமாதானத்துக்கு முன்வந்துள்ளமை, முக்கிய ஒரு திருப்பமும், உறுதியான நிலைப்பாடுமாகும்!

இத்தகைய உறுதியும், உன்னதமான நிலையை தமிழினம் அடைய தமது இன்னுயிர் ஈந்த ஆயிரமாயிரம் வீரமிகு தியாகிகளையும், உடன் பிறப்புக்களையும் இவ்வேளையில் நினைவில் கொள்வது அத்தியாவசியம்.

இவர்கள் அனைவரினதும், தியாக வேள்வியில் தமிழினத்துக்கு உறுதியான நிரந்தர தீர்வு உருவாக அனைவரினதும் மனம் உவந்த பங்களிப்பு அவசியத்திலும் அவசியம்!

— மயூரன்

### சிங்கள மொழித் தேர்ச்சியின்மையால்

# பாதிக்கப்பட்ட கிராம சேவகர் பதவி உறுதி செய்யப்படும்

[சித்தன்கேணி]

சிங்கள மொழி தேர்ச்சியின்மை காரணமாக இதுவரை பதவி உறுதிப்படுத்தப்படாமல் இருக்கும் கிராமசேவை அலுவலர்களின் பதவியை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன் காகிதாதிகள், அலுவலக தளபாடங்கள். பெயர்ப் பலகை, விளம்பரப்பலகை, போன்ற குறிப்பிட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வேன்".

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. சண்முகநாதன் தம்மைச் சந்தித்து கலந்துரையாடிய தமிழ்பேசும் கிராம சேவை அலுவலர் சங்கத்தினரிடம் உறுதியளித்துள்ளார்.

தமிழ்பேசும் கிராமசேவை அலுவலர் சங்கத்தின் தலைவர் செயலாளர் அடங்கிய குழுவினர் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கிராமசேவை அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் அடங்கிய 17 கோரிக்கைகளை கையளித்து கலந்துரையாடினர்.

கடந்த நான்கு வருடங்களாக பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக இருந்து அண்மையில் கிராமசேவை அலுவலர்களாகபதவிமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி வழங்கப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டியபோது, விவசாயத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். [137]

## பதிவாளர் பிரிவு அதிகரிக்கும்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு திருமணப் பதிவாளர் பிரிவுகள் அதிகரிக்கப்படவுள்ளன. (137)

## குருபூசை நடத்த ஏற்பாடு

(கொழும்புத்துறை)

யாழ் திருநெல்வேலியில் அமைந்திருக்கும் சைவத் தொண்டர் நிலையத் தொண்டர், சிறுவர்கள் முதலாம் திகதி முதல் நல்லூரில் அமைந்திருக்கும் அறுபத்தி மூன்று நாயன்மார்களதும் குருபூசைகளை அவ்வப்போது நடாத்தவுள்ளார்கள்.

இதற்கான ஒழுங்குகளை நிலைய அமைப்பாளர் சைவத் திரு. இ. சுவாமிநாதன் மேற்கொண்டுள்ளார். [154]

## இராசி பலன்

**03-01-1991**

**வியாழக்கிழமை**

திரியோதசி நண்பகல் 5.54 வரை: ஆயிலியம் நள்ளிரவு 11, 45 வரை, சித்தா அமிர்த யோகம், இராகுகாலம் பகல் 2. 01 முதல் 3. 18 வரை. நல்லநேரம் காலை 9-40 முதல் 10 40.

மேஷம்- மனப்போராட்டம், தொழில் உறவுபாதிப்பு. குடும்பகவலை, சகோதர உதவி.

இடபம்:- காரிய பலிதம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழில் லாபம், நீண்ட பயணம்.

மிதுனம்:- நண்பர்கள் பகை தொழில் குளப்பம், அதிக செலவு, குடும்பத்தில் சோதனை.

கடகம்:- மறைமுக எதிர்ப்பு, தொழில் மாற்றம், அதிகாரிகள் உதவி, காரிய வெற்றி.

சிங்கம்:- தொழில்பிணக்கு, குடும்ப சச்சரவு, புதிய சிந்தனை, காரியதாமதம், அகால போஜனம்.

கன்னி:- நண்பர்கள் உதவி, குடும்பத்தில் குதூகலம், பண வரவு, கடன் வரவு, புதிய பதவி.

துலாம்:- பயணங்களால் துன்பம், அலைச்சல் மிகுதி, வைத்திய செலவு, கருத்து முரண்பாடு.

விருச்சிகம்;- அடம்பிடித்தல் அவசரப்போக்கு, குடும்ப சந்தேகம் தொழில் கஷ்டம்.

தனுசு:- அதிகாரம் காரிய தாமதம், குடும்ப சிக்கல், பணக்கவலை, பொதுப்பணி.

மகரம்:- தொழில் சிறப்பு, ஞானிகள் சந்திப்பு, வீட்டில் சுபகாரியம், புத்திரர்மகிழ்ச்சி.

கும்பம்;- தொழில் போட்டி, குடும்பத்தில் உல்லாசம் மனைமாற்றம், எதிர்பாராத உதவி,

மீனம்;- குடும்பத்தில் குளப்பம், அதிக யோசனை, போட்டி மனப்பான்மை, அதிகாரிகள் சினம்.

'ஜோஸ்யர்'

## வாழ்த்து!

[யாழ்ப்பாணம்]

'ஈழநாடு' தினசரி, வாரமலர் ஆகியன முன்னைய பொலிவுடன் புதுப்புது விடயங்களை மீண்டும் தாங்கி புத்தாண்டில் தன் முதிர் நடைபோட்டிடமுக்கண் சிவனார் கருணைபொழியட்டும்என்று சிவநெறிப் புரவலர் க. கனகராசா அனுப்பியுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:

தாங்கள் வெளியிட்ட புத்தாண்டுப் பஞ்சாங்கக் கலண்டர் பெருமனதின் பெறுபேறும். அமரர் கே. கி. தங்கராசா அவர்கள் படம் சாந்தி என்று சொல்வது போன்ற உணர்வைத் தருகிறது. தாள்கள் கிடையாத இந்நாளிலும் வழமை போல் வெளிக்கொணர்ந்தது அற்புதம். புத்தாண்டு வாழ்த்துக்கள்.

### கட்டாக்காலி

## நாய்கள் அழிக்கப்பட்டன

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் நீண்டகாலமாக நோயாளருக்கும் ஊழியர்களுக்கும் பெரும் உபத்திரவம் கொடுத்துவந்த கட்டாக்காலி நாய்கள் பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் மேற்கொண்ட முயற்சியினால் அழிக்கப்பட்டன. பண்டத்தரிப்பு சந்தைப்பகுதியிலும் கட்டாக்காலி நாய்களும் இவ்வாறு கொல்லப்பட்டு புதைக்கப்பட்டன. (72)

## என்ன சங்கதி?

வழக்கம் போல் அன்றும் அந்தக் கடைக்கு தேநீர் குடிக்க சென்றிந்தேன்.

கேரதீவால் 20 லொறிகளுக்கு மேல் உணவுப் பொருள்களுடன் யாழ்ப்பாணம் வந்திருந்தன. அதனால் சீனியின் விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. கிலோ 50 ரூபாவாக குறைந்திருந்தது.

இந்தக் கடையில் முன்பு தேநீர் 3 ரூபா. சீனி விலை குறைந்ததால் தேநீர் விலையும் குறைந்திருக்கும் என நம்பினேன்.

தேநீர் குடித்தபின் விலையைக் கேட்டேன். 3 ரூபா என்றார் கடைக்காரர்.

இந்தக்கடையில் சில மாதங்களுக்கு முன் 2 ரூபா தான் தேநீர். பாதை தடைப்பட்டு லொறிகள் வரவில்லை. பதுக்கப்பட்ட சீனி மூடைகள் வெளியில் வந்தன. சீனியின் விலை கிலோ 90 ரூபாவானது. தேநீர் 3 ரூபாவாக உயர்ந்தது.

இப்போ சீனி விலை குறைந்து கூட தேநீர் விலை இறங்கவில்லை.

இதனால் அதிகம் பாதிப்படைவது தினமும் வேலை செய்து வரும் ஏழைத் தொழிலாளர்கள் தான்.

'ஊரோடி

### பட்டப்பின் படிப்பு

# கல்வி டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகப் பட்டப் பின்படிப்புக் கல்வி டிப்புளோமா முழுநேரப் பரீட்சை (1989) முடிவு வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சையில் திருமதி பி. சிதம்பரநாதன் அதி விசேட சித்தியடைந்துள்ளார்.

திறமைச்சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:- திருமதி பி. பசுபதி, திருமதி கே. விநாயகமூர்த்தி.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு: கே. பாலச்சந்திரன் எஸ். கந்தசாமி, பி. கணேசன், என். பி. முகமது சுல்தான், வி. பஞ்சலிங்கம், செல்வி என். சோமசுந்தரம்.

நானசித்தியடைந்தோர்விபரம் வருமாறு: ஜி. நடராஜா. (153)

### பிராந்திய

## சுகாதார நிலையம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிராந்திய சுகாதாரப் பயிற்சி நிலையம் தற்போது தாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி வருகிறது.

மேற்படி சுகாதாரப் பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகின. குடும்பநல சேவையாளர்கள் இரண்டாம் பகுதி பயிற்சிக்கு நேற்று 28 பயிற்சியாளர்கள் சமுகமளித்திருந்தனர். (153)

## பலதும் பத்தும்

### தாமரைப்பூ சித்திரம்

உக்கிரசிங்கனால் 8ம் நூற்றுண்டில்கட்டப்பட்ட மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும், செண்பகப்பெருமாள் என்னும் ஸ்ரீசங்கபோதி புவனேகபாகுவால் கட்டப்பட்ட நல்லூர் கந்தசுவாமி கோவிலும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டன. பின்னர் இவ்ஆலயங்கள் 1793 ம் ஆண்டிற்குப் பின்னும் ஆங்கிலேயர் அரசாட்சிக்காலத்திலும் கட்டப்பட்டனவாகும். யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங்களை இடித்து எடுத்த கற்களைக்கொண்டே யாழ்ப்பாணத்துக் கோட்டையைப் போர்த்துக்கேயர்கட்டினார்கள் என்பதற்கு இக்கோட்டையின் அத்திபாரத்தில் காணப்படும் தாமரைப்பூச்சித்திரம் செதுக்கப்பட்ட வாயிற்படிக்கல்லே அழியாச் சான்றாகும். இக்கல்லின் படம் இலங்கையின் கலைவளர்ச்சி என்னும் தொல்பொருள் ஆய்வுநூலில் காணப்படுகின்றது.

ஞானி

# யுத்தம் மூளும் அபாயம்;

# 25 லட்சம் படைகள் தயார்

## இறுதிமுயற்சி தொடர்கிறது

[பாக்தாத்]

வளைகுடாவில் எந்த வேளை யிலும் (15ம் திகதிக்கு பின்) யுத்தம் மூளும் சாத்தியம்பெரிதும் அதிகரித்து வருவதை யடுத்து எல்லா நாடுகளும் யுத்தத்திற்கு தயாராகி வருகின்றன.

ஈராக் ஈரான், சவூதிஅரேபியா, இஸ்ரேல், சிரியா மற்றும் வளைகுடாவிலுள்ள பன்நாட்டு படைகளும் தமது துருப்புகளை முன்னோக்கி நகர்த்தி வருகின்றன.

வளைகுடா பகுதியில் தற்போது சுமார் 25லட்சம் படையினரும், 30க்கும் மேற்பட்ட யுத்தக் கப்பல்களும் 3 000ற்கும்மேற்பட்டயுத்த விமானங்களும் தயார் நிலையிலுள்ளன.

இதற்கிடையில் இந்த யுத்தத்தை தவிர்க்கும் முயற்சியில் பல நாடுகளும் முனைந்து வ கின்றபோதிலும் குவைத்தை விட்டுவெளியேற ஈராக் அடியோடு மறுத்துவிட்டது. (சி)

## வ. பி. போ. சபை

# பஸ் சேவைகள்

## 5 முதல் ஆரம்பமாகும்?

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சேவைகள் 5ம் திகதி சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

பஸ் சேவைகளுக்கான எரிபொருள்கள் கொழும்பிலிருந்து கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பஸ்கள் இயங்க முடியாத நிலையிலுள்ளதாகவும் திருத்தவேலைகள் நடைபெறவேண்டிய நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### போராளிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையென இந்தியக் கடற்படையின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பல் மூழ்கிய இடம், இலங்கை-இந்தியக் கடற்பகுதியாகுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

### தமிழ் அமைப்புகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கோரிக்கை விடுத்துள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்துள்ளது.

இதேவேளை யுத்த நிறுத்தத்தை கண்காணிக்க இந்தியப்படைகளை அழைக்க வேண்டுமெனவும், இலங்கை இந்திய ஒப்பந்தம் மீள புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும் ஈ. என். டி. எல்: எவ்.கோரியுள்ளது. [சி]

### கால அவகாசம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லும் முடிவு வெளியாகவில்லை.

இது தொடர்பாக மேலும் ஆராய அரசு மேலதிக கால அவகாசம் கோரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (வி)

## கொழும்பு நோக்கி ‘லங்காசிறி’

[யாழ்ப்பாணம்]

லங்காசிறி கப்பல் நேற்று மாலை பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

மேற்படி கப்பலில் யாழ். செயலக பொதுசன உறவு அதிகாரியும், பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியுமான எஸ். ஐ. நித்தியராஜ் நேற்றுக் கொழும்புக்கு பயணமானார். (153)

# நான்கு வீடுகள்

## குண்டுவைத்து தகர்ப்பு

[மட்டுநகர்]

வக்கிஎல்ல இராணுவத்தினர், கோவில்போரதீவுப் பகுதியில், திருநாவுக்கரசு, சங்கர், சாமித்தம்பி ஆகியோரின் வீடுகளை குண்டுவைத்துத் தகர்த்துள்ளனர்.

இதேபோன்று சவளக்கடை இராணுவத்தினர், முதலாம் குறிச்சியிலுள்ள நடராசா என்பவரின் வீட்டையும் குண்டுவைத்துத் தகர்த்துள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## 3 பெண்கள் மானபங்கம்

(மட்டுநகர்)

வக்கிஎல்ல இராணுவத்தினர் கடந்தவாரம், சித்திரன் மைனு [வயது-19], சித்திரன் திலகம் [வயது-22], சின்னத்தம்பி திலகம் [வயது-22] ஆகிய மூன்று தமிழ் பெண்களை மானபங்கப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. (வி)

## கப்டன் ரேய் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் கடந்த ஒக்டோபர் மாதம் 17ம் திகதி ஏற்பட்ட நேரடி மோதலில் காயமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கப்டன் ரேய் [சிற்றம்பலம் மகேந்திரராசா மயிலிட்டி] நேற்றுமுன்தினம் வீரமரணம் அடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (விக)

### காரைநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை கடற்றொழிலில் ஈடுபட்டவர்களை படையினர் பீரங்கிப்படகில் கலைத்து வந்ததையடுத்து மீனவர் தப்பி வந்து சேர்ந்தனர்.

இதேவேளை, காலை 11 மணியளவில் கடற்படை முகாம் பகுதியில் பீரங்கிப் படகுகளிலிருந்து ஏழுக்கும் மேற்பட்ட வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. நண்பகல் சீ-பிளேனும், ஹெலியும் இப்பகுதியில் பல தடவைகள் சுற்றிப் பறந்தன. (சி)

## 1990-ம் ஆண்டு மரணக்கொடுப்பனவு முடிவுபெற்றது

(மானிப்பாய்)

வன்செயலால் இறந்தவர்களின் மரணச் செலவான ரூபா இரண்டாயிரம் 27 பேருக்கு யாழ். செயலகத்தில் வழங்கப்பட்டது,

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளினால் இறந்தவர்களின் மரணச் செலவுக்காக வழங்கப்படும் இவ் வருடத்துக்கான கொடுப்பனவுகள் முடிவடைந்துவிட்டதாகவும் அடுத்த கொடுப்பனவு 1991ம் ஆண்டு வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (71)

### தளபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களை கைதுசெய்துள்ளதுடன், பணம் தந்தால் மட்டுமே இவர்களை விடுதலை செய்யமுடியும் என்றும் கூறியுள்ளனர். (வி-க)

### அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

அரசின் இந்தக் குற்றச்சாட்டு தம்மீது பழிசுமத்தும் ஓர் நடவடிக்கைக்காக மேற்கொள்ளப்பட்டதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி-கி)

# 600 கைதிகள் நேற்று விடுதலை

(கொழும்பு)

தென் பகுதிச் சிறைகளில் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் 600 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி, பதவியேற்று இரண்டு ஆண்டுகள் நேற்றுப் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

நீதியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் இதற்கான சிபார்சை மேற்கொண்டிருந்தார். (சி)

# பழுதடையும் நிலையில் 80 மெற்றிக் தொன் ‘மா’

[வேலணை]

நெடுந்தீவு உணவுக்களஞ்சியத்தில் 80 மெற்றிக் தொன் மா மூடைகள் பொதுமக்களுக்கு வழங்கப்படாத நிலையில் பழுதடையும் நிலையிலுள்ளதாம்,

தீவுப்பகுதி மக்களுக்கு நிவாரணத்துக்கென கப்பலில்வந்த இந்த ‘மா’ கடந்த ஒருமாதத்திற்கு மேலாக களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளதாம்.

தமக்கு இந்த நிவாரணத்தைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

# நாடு பிளவுபடுவதை அரசு அனுமதியாது

## பிரேமா தமிழிலும் உரை

(கண்டி)

நாடு பிளவுபடுவதை அரசு ஒருபோதும் அனுமதிக்காது. நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அரசு தொடர்ந்து பாடுபடுமென ஜனாதிபதி திரு. பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, பதவியேற்று இரு ஆண்டு நிறைவுபெற்றதையடுத்து கண்டி தலதா மாளிகையில் நடைபெற்ற விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்; நாட்டிலிருந்து தீவிரவாதத்தை அகற்ற அரசு தொடர்ந்து பாடுபடும். வன்செயலுக்கும், கலவரங்களுக்கும் தூபமிடும் தீயசக்திகள் விடயத்தில் அரசு விழிப்பாக செயற்படும் என்றார்.

இவ்விழாவில் ஜனாதிபதி சில நிமிடம் தமிழிலும் உரையாற்றினார். (சி)

# இவர்கள் இப்போ அங்கு இல்லை

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் இராணுவத்துடன் செயற்பட்டு வந்த தமிழ்க் குழுக்களைக் கடந்த இரு தினங்களாக அப்பகுதியில் காணவில்லையெனப் பயணிகள் தெரிவிக்கின்றனர்,

வவுனியா நகரிலும், பூந்தோட்டப் பகுதியிலும் இத் தமிழ்க் குழுக்கள் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து தமிழர்களைப் பல மாதங்களாகப் பல வகைச் சோதனைகளுக்கு உட்படுத்திவந்தன.

புலிகளின் யுத்த நிறுத்தமும், இராணுவத்தினரின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதையும் அடுத்து இவர்களை இப்பகுதியில் காணவில்லையாம். (கி)

# 18 லொறிகள் வடக்கே வந்தன

(பூநகரி நிருபர்)

கொழும்பில் இருந்து நேற்று 18 லொறிகள் வடபகுதி நோக்கி வந்துள்ளன. இவற்றில் 12ல் உணவுப் பொருள்கள் வந்துள்ளன;

வவுனியாவில் 7 நாட்கள் தடுத்துவைக்கப்பட்ட பின்பே இந்த 18 லொறிகளும் 1ம் திகதி யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

இவற்றில் 6 லொறிகளில் மதுபான வகைகள் வந்துள்ளதாம். மதுபான லொறிச் சாரதிகள் சிறிலங்கா இராணுவத்தால் தாக்கப்பட்ட பின்பே இங்கு வர அனுமதிக்கப்பட்டனராம். [கி]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

### யுத்த நிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பான்மை கட்சிகளின் முடிவின் படியே ஜனாதிபதி இதற்கான முடிவை எடுப்பாரெனவும் சாதகமானதோ அல்லது பாதகமானதோ இப்பிரச்னையை அனைத்து கட்சிகளின் தலையில் கட்டிவிடவே ஜனாதிபதி முயல்வதாகவும் அந்த அவதானிகள் தெரிவித்துள்ளனர். [கி]

## நாளை இறுதிப் போட்டி

(கல்கத்தா)

ஆசியக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டியில், இந்தியாவும், இலங்கையும் பங்குபற்றுகின்றன; இப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கல்கத்தாவில் நடைபெறுகிறது:

மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் இப்போட்டியில் இலங்கை அணி முதல் இரு போட்டிகளிலும் வெற்றிபெற்றதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## மிதி வெடியில் கால் இழப்பு

(யாழ்ப்பாணம்]

காரைநகர் கருங்காலிப் பகுதியில் நேற்றுக்காலை மிதி வெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் தமது காலொன்றை இழந்ததுடன் மறுகாலில் பலத்த காயமடைந்துமுள்ளார்.

கருங்காலியை சேர்ந்த கந்தசாமி சற்குணராசா (வயது 24] என்பவரே இவ்வாறு மிதிவெடியில் சிக்கியவராவார். கடற்படை முகாமுக்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது. (சி)